

பயிற்சி

16.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. வாழ்க்கையில் எம்மை நல்வழிப்படுத்துபவர்கள் யாவர்?

தாய், தந்தை, ஆசிரியர், பாதுகாவலர்

2. ஒரு வெற்றியின் பின்னணியில் இருப்பவை எவை?

வலியும் வேதனையும்

3. உன்னுள் இருக்கவேண்டுமென எதிர்பார்க்கும் பண்புகள் எவை?

நற்குணம், நற்பண்பு, நல்லொழுக்கம், அறிவு

4. தவறை திருத்திக்கொள்வதன் அவசியம் என்ன?

சரியான பாதையில் செல்வதற்கு

5. பாட்டி குறிப்பிட்ட பென்சிலின் பண்புகள் ஐந்தும் எவை?

வழிநடத்துதல், வலியையும் வேதனையையும் தாங்கி சிறப்பாக செயலாற்றல், தவறைத்திருத்துதல், வெளித்தோற்றத்தை விட உள்தோற்றத்தின் முக்கியத்துவம், ஒவ்வொரு எழுத்தினதும் அடையாளம்

www.ksou.lk

16.2 இடைவெளிகளைப் பூர்த்தி செய்வோம்.

i. அ**து** உ**ன**து பார்**வை**யைப் பொ**று**த்த**து**.

ii. பெ**ன்** சிலா**ல்** தா**னா**கவே எ**ழு**த மு**டி**யா**து**.

iii. எ**ழு**த எ**ழு**தப் பெ**ன்சி ல்** கூ**ர்**மையற் ற**தா**கி வி**டு**ம்.

iv. உ**ண்**மையிலே**யே** நா**ன்** உ**ன்**னைப் ப**ற்**றித்தா**ன்** எ**ழு**துகி**ன்**றே**ன்**.

www.ikendu.lk

16.3 பொருத்தமான இரட்டைக்கிளவியை இடைவெளியில் எழுதுவோம்.

i. குழந்தை கலகல எனச் சிரித்தது.

ii. கண்ணாடி பளபள என மின்னியது.

iii. புகையிரதம் கடகட எனச் சென்றது.

iv. நீரோடை சலசல என ஓடியது.

v. பட்டாசு படபட என வெடித்தது.

பளபள கலகல சலசல கடகட படபட

www.lkedu.lk

16.4 பொருத்தமான அடைமொழிச் சொல்லைப் பயன்படுத்தி வாக்கியங்களை மீண்டும் எழுதுவோம்.



வெள்ளைப் பசுமையான அழகான
நீலவண்ண கனிந்த பச்சைக்



உதாரணம் :- பூனை பாலைக் குடித்தது.

வெள்ளைப் பூனை பாலைக் குடித்தது.

i. புல் வெளியில் பசுக்கள் மேய்கின்றன.

பசுமையான புல்வெளியில் பசுக்கள் மேய்கின்றன.

ii. பழம் கீழே விழுந்தது.

கனிந்த பழம் கீழே விழுந்தது.

iii. மயில் தோகை விரித்து ஆடுகின்றது.

நீலவண்ண மயில் தோகை விரித்து ஆடுகின்றது.

www.ikedu.lk

iv. சிறுமி நடனம் ஆடினாள்.

அழகான சிறுமி நடனம் ஆடினாள்.

v. கிளி பழத்தைக் கொத்தியது.

பச்சைக் கிளி பழத்தைக் கொத்தியது.

www.lkedu.lk

17 தினக்குறிப்பு எழுதுவோம்

சுதன், விவேகானந்தா வித்தியாலயத்தில் தரம் நான்கில் கல்விபயிலும் ஒரு மாணவன். ஒருநாள் அவனது வகுப்பாசிரியர் தினக்குறிப்பு எழுதும் முறைபற்றியும் அதனால் கிடைக்கும் நன்மைகள்பற்றியும் கலந்துரையாடினார். அத்துடன், மாதிரித் தினக்குறிப்பொன்றை எழுதவும் கற்றுக்கொடுத்தார். பின்னர், வீட்டுவேலையாக ஒரு வாரத்திற்கான தினக்குறிப்பை எழுதி வருமாறு கூறினார். அதற்கமைய சுதன் வாரத்தின் ஒவ்வொரு நாளும் பாடசாலையிலும் வீட்டிலும் வெளியிலும் தான் பெற்ற அனுபவங்களை தினக்குறிப்பில் எழுதினான். சுதனால் எழுதப்பட்ட ஒரு வாரத்திற்கான தினக்குறிப்பு சிறப்பான முறையில் எழுதப்பட்டுள்ளதாக ஆசிரியர் பாராட்டினார். சுதனின் தினக்குறிப்பை நாங்களும் வாசிப்போம். அதன்படி எழுதிப் பழகுவோம்.

www.ikedu.lk

பங்குனி 2018

திங்கட்கிழமை

4

இன்று பாடசாலையில் மாணவர் மன்றம் பி.ப. 12.30 மணிக்கு ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் நான், ''மாணவர் கடமை'' எனும் தலைப்பில் மூன்று நிமிடங்கள் பேசினேன். அதிபர் எனது பேச்சைப் பாராட்டினார்.

மாலை 4.00 மணியளவில் எங்களது வீட்டிற்கு மாமா வந்தார். பின்னர் என்னுடன் சதுரங்கம் விளையாடினார். அவருடன் விளையாடியதன் மூலம் சதுரங்கம் விளையாடுவதற்கான பல புதிய நுட்பங்களை அறிந்துகொண்டேன்.

இன்றைய நாள் மிகவும் பயனுள்ள நாளாக அமைந்திருந்தது.

www.ikeyu.lk